லுள்ள பாடசாலைகளில் வித்தியாலயமே மிகக் குறைவான சம்பளத்தை மாணவர்களிடம் பெற்றுவந்தது. அதிலும், அநேக வறுமையிலுள்ள பிள்ளைகள் இலவசமாகவே படித்து வந்தனர். வசதியுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பெரும்பாடசாலைகளாகிய இந்துக்கல்லூரி, மத்திய, சென் ஜோன்ஸ், சென் பற்றிக்ஸ் ஆகிய கல்லூரிகளுக்கு அனுப்பினர். ஆகவே, வைத்தீஸ்வர வித்தியாலயம் ஏழை மாணவரது பாடசாலையாகத் திகழ்ந்தது. அக்காலத்தில் ஆசிரியர்களது வேதனம் மாணவர்கள் தரும் சம்பளத்திலிருந்தும் ஆண்டுப் பரீட்சை முடிந்ததும் அரசாங்கம் தரும் மான்யத்திலிருந்துமே பெற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது. அரசாங்கம் தரும் மான்யம் $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்குப் பின்பே வந்து சேரும். ஆகவே மாணவர்கள் தரும் சம்பளத்தைப் பாடசாலைச் செலவு நீக்கிச் சரிசமனாக ஆசிரியர்களுக்குப் பிரித்துக் கொடுப்பது வழக்கம். ஓர் ஆசிரியர் மாதமொன்றிற்கு ரூபா 25/- தொடக்கம் ரூபா 40/- வரை இத் திட்டத்தில் பிரித்தெடுக்கக் கூடியதாக இருந்தது. இப்பங்கீட்டில் ஸ்ரீ வயிரமுத்து, ஸ்ரீ வயித்திலிங்கத்துடன் முக்கிய பங்கு எடுத்தனர்.

அக்காலத்தில் அதிபர் ஸ்ரீ அம்பிகைபாகன் உட்பட பெரும்பாலானோர் ஆசிரியர்கள் 1930 தொடக்கம் 1941 வரை பிரமசாரியர்களாகவே இருந்தனர். ஸ்ரீ வயிரமுத்துவும் மற்றைய பிரமசாரிகளான ஆசிரியர்களும் பிரமசரிய ஒழுக்கங்களை முறையாகக் கடைப்பிடித்து வந்தனர். இல்லறம் நடாத்திய மற்றைய ஆசிரியர்களும் ஒழுக்கம் உடையவர்களாகவும் ஆசிரிய இலக்கணங்களுடையவர்களாகவும் இருந்தனர். ஒவ்வொரு வித்தியாலய ஆசிரியரும் தத்தம் கடமையைச் செவ்வனே செய்துவந்தனர். யாழ்ப்பாண இந்துமகளிர் கல்லூரி தோன்றாத அக்காலத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளை—பெண் பிள்ளைகள் உட்பட—வித்தியாலயத்திற்கு அனுப்பி வந்தனர். பெண்பிள்ளைகளை வேம்படி போன்ற பெண்கள் பாடசாலையிற் சேர்க்கும் வண்ணம் பெற்றோர் வற்புறுத்தப்பட்டபோதிலும் அவர்கள் ஆசிரியர்கள் பேரிலுள்ள நம்பிக்கையை எடுத்துக்கூறி வித்தியாலயத்திலேயே தமது பெண்பிள்ளைகளைக் கல்வி கற்பிக்க விரும்பினர். அக்காலத்தில் ஸ்ரீ வயிரமுத்து பிரமசரிய ஆசிரியர்களாகிய எமக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர்.

வேறு வருமானமில்லாது மாதா மாதம் பாடசாலை தரும் சொற்ப பணத்தைக் கொண்டே சீவியம் நடாத்திவந்த ஆசிரியர்களாகிய எமக்குக் கடமையுணர்ச்சியுடன் பயிற்றுவித்தல்தொழிலில் எம்மைக் கண்ணுங் கருத்துமாக இருக்கச் செய்த பெருமை எமது உடனுசிரியராக விருந்த ஸ்ரீ வயிரமுத்துவுக்கே உரியது. இத்தகைய கடமையுணர்ச்சியுடனும் தியாக சிந்தையுடனும் ஸ்ரீ வயிரமுத்துவும் மற்றைய உடனுசிரியர்களும் பாடசாலையில் தொண்டு செய்வதற்கு உதவியாகவிருந்த அதிபர் ஸ்ரீ அம்பிகைபாகனின் பங்கும் சிறிதன்று. அவருடைய உதவியும், ஆசியும், பாடசாலை வளர்ந்துவர வேண்டுமென்ற ஆர்வமும் சேவையும் முட்டுக்கட்டை போடாத குணமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய உதவியாசிரியராகிய ஸ்ரீ வயிரமுத்துவுக்கும் மற்றையோருக்கும் பேருதவியாக இருந்தன. இத்தகைய சூழ்நிலையில் வைத்தீஸ்வர வித்தியாலயம் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளரத் தொடங்கியது. 1948-ம் ஆண்டுக்கு முன் தரம் Cல் இருந்த பாடசாலை 1948-ம் ஆண்டில் தரம் Bயாக உயர்த்தப்பட்டது இக்காலத்தில் சிறிதளவில் உயிரியற்கூடம் மாத்திரம் வைத்திருந்த பாடசாலை இரசாயன, பௌதிக, மனையியல் ஆகிய ஆய்வுக் கூடங்களையும் விவேகாநந்த மணி மண்டபத்தையும், நூல் நிலையத்தையும் அதிபர், ஸ்ரீ வயிரமுத்து மற்றைய ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரது பெருமுயற்சியால் கட்டிமுடிக்கக் கூடியதாகவிருந்தது. 1952ஆம் ஆண்டில் நடாத்திய பொருட்காட்சியும் களியாட்டு விழாவும் குறிப்பாக மணி மண்டபத்தையும் உயிரியல் ஆய்வுக் கூடத்தையுங் கட்டவும் பொதுவாக மற்றைய அங்கங்களைப் பூர்த்தி செய்யவும் பேருதவி புரிந்தது. இவ் விழாவில் ஸ்ரீ வயிரமுத்துவின் பங்கு அளப்பரிது. அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களைப் பழைய மாணவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் விற்பனை செய்வதற்குப் பேருதவி புரிந்ததுமன்றி அதனாலும் விழாவாலும் சேர்ந்த பணத்துக்கும் சகல கணக்குகளுக்கும் பொறுப்பாளனாக இருந்ததும் ஸ்ரீ வயிரமுத்துவே. வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் விவேகானந்த மணி மண்டபமும் மற்றைய அங்கங்களும் இருக்குமளவிற்கும் ஸ்ரீ வயிரமுத்துவின் பெயரும் அத்துடன் பின்னிப் பிணைந்ததாகவே யிருக்கும். சுருங்கக் கூறின் ஸ்ரீ வயிரமுத்து தனது உடல் பொருள் ஆவியனைத்தையும் வைத்தீஸ்வர வித்தியாலய சேவைக்கே அர்ப்பணம் செய்திருந்தார். இத்தகைய எல்லா அங்கங்களையும் கொண்ட பாடசாலை 1952ஆம் ஆண்டில் தரம் A ஆக உயர்த்தப்பட்டது யாவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. அதன் பின் பாடசாலையின் வளர்ச்சியில் ஸ்ரீ வயிரமுத்துவின் பங்கையும், அவர் ஆங்கில மொழியும் சரித்திரமும் கற்பிக்கும் ஆற்றலையும் 1945க்குப் பின் உப அதிபராக ஆற்றிய சேவைகளைப் பற்றியும் மற்றைய உடனுசிரியர்களை எழுதும் வண்ணம் விட்டு, ஸ்ரீ வயிரமுத்துவும் அவரது தர்மபத்தினியாரும் இருபிள்ளைகளும் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழவேண்டுமென எல்லாம் வல்ல ஈஸ்வரனை வேண்டுகின்றேன்.

---

"உயர்தரக் கல்விப் பாடப் புத்தகத்திற்காகக் காத்திருந்தால் தழைக்குப் பின் நான் தோன்றுவேன் என்று மரம் காத்திருக்கும்; கரைக்கும் பின் நான் தோன்றுவேன் என்று நதி காத்திருக்கும்."

— தாகூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Vice - Principal

**P. Elankanayagam, Esq** B. A. *Post - Graduate Trained.*

Shunning publicity and courting anonymity he lived laborious days. He seemed to me to regard work at all times as a blessing and never as a burden. One comes across few people so dedicated to their work. I have not heard him talk about the Bhagavad-Gita but I have seen him living it. Our school has been singularly fortunate for the last twenty-five years in having men at the helm who could work as a team with such complete self - abnegation. Though both the Principal and the Vice - Principal have appeared complementary personalities (as far as school work was concerned) they have been equally appreciative of how important in the educational process are ideals and the association with men of ideals.

I shall not however attempt here an analysis of our Vice - Principal's character or an assessment of his work. The numerous friends, associates and students who will be contributing to our souvenir will be doing that service. Such work may not profit him greatly but it certainly will be of immense benefit to us. I shall only pay my tribute to him in the words of Ralph Waldo Emerson, whose words one is reminded of, in thinking of him.

"The mass of men worry themselves into nameless graves, while here and there a great unselfish soul forgets himself into immortality."

---

"Knowledge is proud that he has learned so much,
Wisdom is humble that he knows not more"

— ***William Cowper***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உப அதிபர்

பண்டிதர் செ. நடராசா

வண்ணை வைத்தீஸ்வர வித்தியால யத்தின் வளர்ச்சியிற் சிறந்த பங்கெடுத் துக் கொண்டவர்களிற் சிறந்தவர் நம் உப அதிபர் என்றால் அது மிகையா காது; முகமனுமாகாது. தம் சேவைக் காலம் முழுவதையும் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கே அர்ப்பணித்த பெருமையும் அவருக்கேயுரியது. அவர் தம் சேவைக் காலத்தில் ஒரு சிறு காலத்தையாவது வேறு தொழிலில் அல்லது வேறு சிந்தனையில் அல்லது வேறு இடத்திற் செலவழித்ததே கிடையாது. கனவிலும் அவர் கண்டது வைத்தீஸ்வர வித்தியாலயமே. நின் றும், கிடந்தும், நடந்தும், இருந்தும் நினைத்த நினைவெல்லாம் வைத்தீஸ் வர வித்தியாலயமே. சுருங்கக் கூறின் அவர் தம் வாழ்நாளை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கு அர்ப்பணித்தார் என்று கூறி விடலாம்.

கல்லூரிகளில் மணியடித்த பின் வந்து மணியடிக்கு முன் செல்லும் ஆசிரியமரபும் நம்மிடையே உண்டு. ஆனால் இதற்கு முழுமாறாகக் காலையா காரத்தை முடித்துக் கொண்டு கல் லூரிக்கு வந்த உபஅதிபர் மாலையாறு மணிக்குக் கல்லூரியை விட்டுப் புறப் படுவதைப் பலர் கண்டு வியப்படை வர். ஆனால் இது சாதாரண காலங் களில், விசேஷ காலங்களிற் சொல்ல வேண்டியதில்லை. இரவு எட்டுமணி பத்துமணி, பன்னிரண்டு மணிவரை யிலும் கூட அலுக்காது கந்தோரி லிருந்து வேலை செய்வது அவருக்கு இயல்பாகும். அவருக்கு உதவிக்கிருப் பவர்களையும் அப்படியே இருந்து வேலைசெய்ய அவர் கேட்டுக்கொள் வார்.

> "மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயினர்"

என்ற பாடல் நம் உப அதிபரைப் பார்த்துத் தான் பாடப்பட்டிருக்க வேண்டுமென்று கூட எண்ணலாம்.

திருவள்ளுவரின் வினைத்திட்பமென்ற அதிகாரம் இலக்கணமானால் நம் உப அதிபர் அதற்கு இலக்கியமாவார். எந் தக் கருமத்தையும் அவசரமாகச் செய் வது அவர் வாழ்க்கையிற் காணமுடியா ததொன்று. அவரது நடையே அவரது அமைதியைக் காட்டும். ஒரு கருமத் தைச் செய்ய அவர் எடுத்துக் கொண் டால் எவ்வளவு காலஞ் சென்றாலும், எவ்வளவு சிரமமேற்பட்டாலும், எத் தனை பேர் அவதியுற்றாலும், அக்கரு மத்தைத் தான் ஆரத்தீர யோசித்து நூறு காகிதத்திலே திட்டமிட்டு இறு தியாகச் சரியான வழி கிடைக்கும் வரை கருமத்தைத் தொடங்கவே மாட்டார். தொடங்கினால் அது நிறை வேறும் வரை திண்ணிதாக முயன்று பயன் காண்பது அவருக்கியல்பா யமைந்த குணமாகும். தோல்வியேற் பட்டாலும் தான் திட்டமிட்டுத் தொடங்கியதை இடையில் விட்டு விடும் இயல்பு அவருக்கில்லை.

நம் உப அதிபரின் தியாகச் செயல் களுட் சிறந்தது தம்முழைப்பிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதியமாகப் பொருளேயோ, புகழையோ விரும்பாமையாகும். எந்தச் சந்தர்ப்பத்திலும் பொருளே விரும்பி அவர் செயலாற்றவில்லையென்பதை அவர் பகைவரும் ஏற்றுக் கொள்வர். புகழை அவர் ஈட்டவிரும்பியிருந்தாற் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கலாம். ஏன் சிறந்த அதிபராகவோ அன்றி மேற்பட்ட பதவியையோ பெற்றிருக்கலாம். ஆனுல் அவர் அவற்றைக் கனவிலும் எண்ணியதில்லை. வித்தியாலயத்தின் வளர்ச்சியும், அதன் உயர்ச்சியும், தன் புகழெனக் கொண்டு உழைப்பதில் அவர் திருப்தியுற்ருர். வித்தியாலயத்தையும் அவரையும் பிரித்தல் கூடாது. வித்தியாலயமே நம் உப அதிபர். நம் உபஅதிபரே வித்தியாலயம் என்னும் அளவிற்கு அவரும் வித்தியாலயமும் இரண்டறக் கலந்தமையை யாவரும் அறிவர்.

மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் அவர் பழகும் போது அன்பாகவே பழகுவார். சில ஆசிரியர்கள் நண்பர்களாக இருக்கா விட்டாலும் அவர்களது குடும்ப சேமங்களை விசாரித்துத் தொடர்பு வைத்துக் கொள்வதில் விருப்புடையவர். இதனுற் பல ஆசிரியர் அவரைச் சேர்ந்து ஒழுகுவர். கல்லூரியாட்சியிற் பல இன்னல்கள் ஏற்படுதலியல்பே. அப்பொழுதெல்லாம் சிறந்த இராஜதந்திரிகளைப் போல நடந்து அனைவரது வெறுப்பையும் நீக்கி அமைதிபெறச் செய்வார். பேசும் பொழுது நகைச்சுவை படப் பேசுவதினுற் பலரைப் பிணித்துக் கொள்வர். நம் உப அதிபரிடத்துக் கோபத்தைக் கண்டவர் எவருமில்லை. பதட்டம், அவசரம், கோபம் என்ற குணங்கள் அவரிடத்துப் பிறப்பிலிருந்தே விடைபெற்றுக் கொண்டன. மாணவர்களைத் தண்டிக்கும் போதும் சிரித்துக் கொண்டே தண்டிப்பார். அவர் கோபிக்கிருரா இல்லையா என்பதை அவர் முகபாவத்திலோ, பேச்சிலோ கண்டுகொள்ள முடியாது. பெரிய நிர்வாகிகளுக்கிருக்க வேண்டிய விரிவான மனப் போக்கு, திட்டமான முடிவுகள், அயரா உழைப்பு என்பன இவர் பழகி வந்த குணங்களல்ல. பிறப்பிலேயேயமைந்தன.

திரு. கா. வைரமுத்து அவர்களை உபஅதிபராகப் பெற்ற வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆண்டு தோறும் வளர்ந்து யாழ்ப்பாணத்து உயர்தரக் கல்லூரிகளுடன் கைகோத்து நிற்கும் நிலையையடைந்ததில் ஆச்சரியமில்லை.

தியாக சிந்தையமைந்த நிர்வாகிகளின் திறமையிற்றெழிற்படும் எந்தக் கிளர்ச்சியும், எந்தத் தாபனமும் எந்த இயக்கமும் தோல்வியடைந்ததே கிடையாது. மகாத்மஜீ, நேருஜீ போன்ற தலைவர்களால் வழி நடத்தப்பட்ட இந்தியா முன்னேறி வருவதே இதற்குச் சான்ருகும். சிறந்த நிர்வாகிகளைப் பெறலாம். ஆனுல் அவர்கள் சுயநல மிக்கவராயமைந்தால் என்னவாகும். தியாகிகள் சிலர் இருக்கலாம். ஆனுல் நிர்வாகத் திறமையற்ற அவர் தியாகம் பயன் படாது போய்விடும் இரண்டுமமைந்த பெரியோர்களைப் பெறும் தாபனம் மேல்நிலையடைதல் எளிது. இத்தகைய தலைவராகிய திரு. கா. வைரமுத்து அவர்களின் உழைப்பினுல் உயர்ந்து பலருக்கும் பலனளித்துப் பரிமளிக்கும் நிலையை யடைந்துள்ளது வைத்தீஸ்வரவித்தியாலயம்.

"இன்பம்விழையான் வினை விழைவான் தனகேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புடையார்

திரு. செ. குணபாலசிங்கம் B. A., Dip-in-Ed.
கொக்குவில் இந்துக்கல்லூரி

திருவாளர் வைரமுத்து அவர்கள் ஆசிரியத் தொழிலுக்குப் பெருமையளிக்கும் பெரியார். நீண்ட காலமாக வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் உயர்வுக்காக அவர் ஆற்றிய பணிகள் போற்றற்குரியன. ஆசிரிய சமூகமே அவருக்குப் பெரிதும் கடமைப்பாடுடையதாக இருக்கின்றது. அவர் ஆசிரிய சேவையினின்றும் இளைப்பாறும் இவ்வேளையில் அவரின் நற்பணிகளை நினைவுகூரும் நோக்கமாக வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் கழகம் ஒரு நினைவு மலரை வெளியிட முன்வந்துள்ளமை யாவராலும் பாராட்டற்குரிய ஒரு செயலாகும். அந்த நினைவு மலருக்கு ஒரு கட்டுரை வழங்குமாறு எனக்கு அழைப்பு விடுத்ததன் மூலம் அவ்வறிஞரிடம் எனக்குள்ள மதிப்பையும் அன்பையும் வெளிப்படுத்துதற்கு எனக்கு அரிய வாய்ப்பளித்துள்ளனர் அக்கழகத்தார். அவர்களுக்கு எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழகுதற்கெளிய பண்புடைய பெருந்தகை திரு. வைரமுத்து ஆசிரியர் அவர்கள். அவருடைய நட்பினுல் பயன் பெற்ற பலருள் நானும் ஒருவன். வயதளவில் எமக்குள் பெரும் வேறுபாடு உண்டு. ஆனுல், அது எம்முடைய நட்புக்கும் ஒருவர்மேல் மற்றவர் வைத்த மதிப்புக்கும் இடையூருக நிற்கவில்லை. அவருடன் நெருங்கிப் பழகப் பழக அவரிடம் எனக்குள்ள மதிப்பு ஓங்கி வளர்ந்தது. பண்புடையாளர் தொடர்பு ஒரு நாட் பழகினும் இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும் என்பர். இச்சான்ருேருடன் பல ஆண்டுகளாக நான் கொண்ட நட்பு வேரூன்றி வலுப்பெற்றிருக்கிறது.

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே; அவரோடு இணங்கி யிருப்பதுவும் நன்று'' என்றனர் ஆன்ருேர். பத்து ஆண்டுகட்கு முன் வடமாகாண ஆசிரியர் சங்க அலுவலாகவும், வட பகுதிப் புவியியற் கழக அலுவலாகவும் திரு. வைரமுத்து ஆசிரியர் அவர்களைச் சந்தித்தேன். அவருடைய அறிவுரைகளைக் கேட்டேன். அவருடைய அன்புப் பிடியில் அகப்பட்டு நண்பனுனேன். பின், வடமாகாண ஆசிரியர் சங்கப் பரீட்சைச் சபையில் அவருடைய தலைமையில் செயலாற்றும் பாக்கியம் பெற்றேன். எமது தொடர்பால் அவருக்கு ஏதும் நன்மை கிடைத்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது; ஆனுல் நான் பெரும் பயன் அடைந்துள்ளேன். மற்றவர்களை மதித்துப் போற்றும் அவரது உயர்ந்த மனப்பான்மை எமக்கெல்லாம் அறிவூட்டுவதாயுள்ளது.

ஆலோசனை கேட்பதற்காக பலர் அவரிடம் செல்வதுண்டு. ஆசிரியர் சங்க விஷயமாகவும் வேறு விஷயமாகவும் அடிக்கடி நான் அவரைப் போய்ப் பார்த்திருக்கிறேன். எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் இன்சொற் கூறி வரவேற்பர். அகத்தில் பகை வைத்திருப்போரின் முகத்தில் தோன்றும் நகையன்று அவர் முறுவல்; அடுத்தது காட்டும் பளிங்கு போன்று அவரின் உள்ளத் துணர்ச்சியை எடுத்துக் காட்டுவது அது. ''வா தம்பி'', ''வா சகோதரம்'' என்ற வரவேற்பு எத்தனை முறை கேட்டாலும் இனிமையானதாகவே யிருக்கிறது. புன்னகை தவழும் அவருடைய முகம் சாந்தமாயிருந்ததைக் கண்டிருக்கிறேன். அதில் கோபக் குறிப்பை என்றுமே நான் கண்டதில்லை. இவருக்குக் கோபிக்கத் தெரியாதுபோலிருக்கிறது என நான் சந்தேகப்பட்டது முண்டு. வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு என்ன அலுவலாகப் போனாலும் திரு வைரமுத்து ஆசிரியர் அவர்களைக் கண்டு அவருடன் சிறிது உரையாடாவிட்டால் எனக்குத் திருப்தியுண்டாகாது.

கலாசாலையிலாயினும் வீட்டிலாயினும் அவரை நாம் விரும்பியபோது சந்தித்தோம். எப்பொழுது சென்றாலும் எம்மை அமைதியாக அன்போடு வரவேற்று எமக்கு ஆவன செய்வதற்கு அவர் என்றுமே தயங்கியதில்லை மற்றவர்களுக்கு உதவி செய்வதற்குக் காத்திருப்பவர்போல அவர் எப்பொழுதும் காணப்படுவார். விருப்பு வெறுப்பு இன்றி பிரச்சினைகளை ஆராய்ந்து சிக்கல்களை அறுக்கும் அவருடைய தெளிந்த உள்ளத்தையும் திறமையையும் கண்டு நாமெல்லாம் வியப்படைந்துள்ளோம்.

ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் முக்கியமான விஷயங்கள் ஆராயப்படும் போது திருவாளர் வைரமுத்து அவர்களின் சமுகத்தை நாம் பெரிதும் விரும்புவோம். விஷயங்களை விரைவில் கிரகித்துத் தகுந்த முடிவுகளுக்கு எம்மை அவர் வழிநடத்தியுள்ளார். தமது கல்லூரி அலுவல்களிலும் இத் திறமையை நன்கு உபயோகித்துள்ளார்.

கல்லூரியில் பொறுப்பான பதவியை வகித்த இவர் ஆசிரியர்களதும் மாணவர்களதும் உள்ளங்களைக் கவர்ந்துவிட்டார். அதிகாரத்திலும் அன்பு வலிமை கூடியது என்பதை அவர் செயலில் காட்டியுள்ளார் அவரது இனிய வார்த்தைகள் ஆசிரியரும் மாணவரும் தாமாயுணர்ந்து தத்தம் பணிகளைச் செவ்வனே ஆற்றுமாறு செய்திருக்கின்றன. திருவாளர் அம்பிகைபாகன் அவர்களும் திருவாளர் வைரமுத்து அவர்களும் வைத்தீஸ்வர வித்தியாலயம் என்னும் கலைக்கோயிலைக் கட்டிக்காத்து வந்திருக்கிறார்கள். திருவாளர் வைரமுத்து அவர்கள் தனது வாழ்க்கையை இக் கலாசாலையின் சிறப்புக்காக அர்ப்பணித்தவர். அவரைப் பெரும்பாலும் கல்லூரியில்தான் எவரும் காணலாம். அவர் தனது வீட்டில் கழிக்கும் காலம் மிகச் சிறிது. பாடசாலை நேரத்துக்குப் பின்னும், விடுதலை நாட்களிலும் கல்லூரியில் காலத்தைச் செலவிட்டு அதன் பெருமைக்காக உழைத்துள்ளார். வைத்தீஸ்வர வித்தியாலயத்தை நினைக்கும்போது எனது மனக் கண்முன் திரு. வைரமுத்து ஆசிரியர் தோன்றுகிறார். அக்கல்லூரியோடு ஒன்றிவிட்ட அவரின் புகழ் என்றும் விளங்குமென்பதற்கு ஐயமில்லை.

ஆசிரிய சேவை நிறைவுபெற்று இளைப்பாறிய பின்னும் தாம் செய்த சேவைகளை அவர் தொடர்ந்து செய்வாரென்பது எமது திடமான நம்பிக்கை. அவ்வாறு செய்வதற்கு வேண்டிய உடல் நலத்தையும் உள்ள உறுதியையும் இறைவன் அவருக்கு நல்குவாராக. இன்னும் பல்லாண்டு இனிது வாழ்கவென அவரை வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our Vice-principal :*

# A person in whom opposite forces met and mingled

**Mrs. P. Kanthasamy** B A.

I have known Mr. Vyramuthu only for four years and therefore know much less about him than many another at Vaidyeshwara. The justification for writing this short appreciation lies not in the degree of my acquaintance with him but in the depth of the reverence. I have for the great qualities he possesses.

In him there was a coming together of opposites. He was firm and gentle, was rock-like and melting. It was this perfect matching of these opposites in his personality that gave it the rich flavour which it savoured of.

The vice - principal's post held him (mark the order of my words for he never seemed to hold any post of authority) for over fifteen years and it did not corrupt him. He is one in whom power never tarnished humility. To his strong sense of duty he brought a deep understanding of human nature. He got the best out of teachers and the students not with violent shakings but by gentle tappings. As a teacher, he could not only wax eloquent on the theories of teaching but could also handle a class as any other, only so much more efficiently.

With the retirement of Mr. T. Seenivasagam the college felt as though its left arm was amputated. Now with the curtain falling on the services of our vice-principal Mr. Vyramuttu at Vidyalayam we feel armless-just a body with a fine head. Oh! what depths of sorrows are stirred up when this head-the head of the school-looks to its right and to its left in search of the able arms that were once there but alas now missing!!

The void that will be left in the wake of his retirement will be hard to fill. For him personally, this parting will be a wrench; for us, here, it will be difficult to imagine a Vidyalayam without its V. P - I have almost said V. I. P. But we have no doubt that his services to the college will continue to flow unabated. While he was here he served it fully and whole heartedly but as it were only from a distance never showing himself up on the platform. This retirement perhaps affords him an opportunity to serve it still more fully from a still further distance.

We wish him good health, long life, prosperity and the comforts of a retired life.

186039

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Man of Service

**Siva. U. Somasegaram M. A. Ed.**
*Retired Assistant Director of Education*
*President, Hindu Institute of Culture Jaffna.*

I have pleasure in contributing my meed of appreciation of the services by my friend Mr. Vyramuthu to tbe youth of our country as a teacher at Vaidyeshwara Vidyalaya and elsewhere on the eve of his retirement from the educational service.

I will touch on just a few points that struck me, during my contacts with him over the past thirty years. These make him an exceptionally good Guru and Leader of youth

Some teachers are born teachers: other are just made teachers. Mr. Vyramuthu was both born and made a teacher. Coming early under the spiritual. benign influence of the Ramakrishna Mission, it may be mentioned that he was one of the few, very few who imbibed the mission traditions of service above self in the true spirit. Quiet and unassuming, he was always ready to serve the school, the teaching profession and the Department whenever and wherever his services were required. The question of return or remuneration for the work never arose in his mind. It was service in the true Gita traditions

Mr. Vyramuthu was a master of teaching techniques, particularly in the field of the teaching of English. His experience was wide and he had tackled the problems in the spirit of a research worker. He could hold his own with the best that the British Council or the Unesco could supply us with.

Most teachers are guilty of loving to hear their own voices and to be seen on the platforms, as often as possible. Mr. Vyramuttu was always an exception. He would not talk unless it was absolutely necessary. He almost hated to appear on platforms.

Another remarkable virtue in him was contentment. He was always satisfied with his lot and he was never anxious for promotions so long as he was given a good atmosphere to work in. The need, hence, never arose for him to seek the favours of anybody. I am sure he had his personal problems and difficulties but he never allowed them to influence his work as a teacher He had a good grasp of the very complex problems, the teachers have to tackle but, he never allowed a spirit of frustration to overcome him. nor would he criticise others unnecessarily.

Mr. Vyramuttu has many years before him. I am sure he is not lost to the educational world. I join with others in wishing him all success in his efforts towards self realisation through service and prayers May the Blessings of Skantha be with him always.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "My Guru"

**S. Balasubramania Iyer, Esq.**

Even as I write this article about my Guru my mind is full of reminiscences of the past. I have known Mr C. Vairamuthu from my kindergarten days at Vivekananda Vidyalaya; now the prim ıry section of Vaidyeshwara. He had never taught me in the primary section but yet I knew him by sight and had developed a liking towards him As my residence is only a few yards away from Vidyalaya, everyday I had the chance of seeing Mr. Vairamuthu walking to and back from school in a calculated pattern of strides, dressed in spotlessly clean white national and vershti, with a borderless white shawl round his neck, holding an umbrella with some books tugged up in his armfold.

It was when I passed my fifth standard and sought admission to the English medium instruction at Vaidyeshwara that I came to know Mr. Vairamuthu more fully. He was then a teacher of history His way of dealing with the subject with the help of maps created a sustain interest in that subject among the children. I was one of those who were very much fascinated by his approach to the subject of teaching world history in the senior form. There were only seven of us then in his senior class and today all the seven are very successful in their own way. One is a doctor, another is a proctor, two are leading businessmen in Jaffna and out of the remaining three two are teachers and one is a land surveyor. During our student days we used to look forward eagerly to his classes in history. The moment the bell was rung for the history lesson to begin all of us were filled with enthusiasm and there appeared Mr. Vairamuthu on the scene with his usual systematic, narrative skill of dealing with the subject with special regard to minute details. In fact his lessons were so absorbingly interesting they have created among his students an abiding love of the subject and even today all of us are very much interested in reading current world affairs.

In the year 1915 when Mr. P. G. Narayana Iyer left Vaidyeshwara to join Jaffna Hindu College Mr. Vairamuthu took upon himself the task of teaching English at Vaidyeshwara. Since then Mr.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vairamuthu's interest turned towards English and by 1956 with the switch over to Swabasha as the medium of instruction in our schools, he has been moving heaven and earth, to keep up the falling standard of students' attainment in English in our schools. All teachers of English were faced with a serious problem of teaching English as a second language. The standard of attainment in English by our boys fell to unfathomable depths. Teachers of English were highly frustrated at their noble efforts. It was at this juncture my Guru had the farsightedness to change the approach to the teaching of English at Vaidyeshwara. In his usual slow and steady manner he was never disheartened with his efforts. In fact he went on his own to Madras and studied how Dr. Forrester was tackling the subject of teaching English as a second language there. On his return he was full of hope and enthusiasm with his 'structural approach' but we teachers of English at Vaidyeshwara have not been equally enthusiastic about his new way of approach to the subject. There have been many instances where he had exhorted us to drill into our students in Madras structures. To this day he has never been satisfied with the progress of our boys in English at Vaidyeshwara or elsewhere His conception of good English teaching is that pupils should automatically and spontaneously reproduce sentence patterns. However as time went on more and more teachers of English have begun to appreciate and to follow his approach. I am making a special mention of this here inorder to show how my Guru was endowed with that amount of forsightedness which had made him what he is today. Whatever he does he does it very efficiantly and thoroughly always paying special regard to minute details.

The pupils at Vaidyeswara have a high regard and very often a certain amount of 'fear' towards him. When I say 'fear' let me not be misunderstood. His exacting way of questioning the student and calling the attention of the parents often created a sense of fear among the pupils. The parents too came to him for advice regarding their childrens' education. The old boys never forget him because he possesses the rare ability to remember names and faces. Whenever and wherever he meets them he inquires about their health, their job and and their well being. It is this special human touch of his that has endeared him to many a soul. Further no function

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

at Vidyalaya is complete without him. The tremendous financial success of the carnival was specially due to his tactful handling of the event as a joint treasurer with late Mr. Karalasingam (proctor). I had the rare opportunity of working with him in the sale of raffle tickets and it was then I studied him as a man for exemplary work. I consider him 'My Guru' because besides being my teacher he had been a 'Guru' in the true sense of the word. That is when I was faced with failures and was in a despondent mood it was Mr Vairamuthu who cheered me up and showed a new path to follow. He is an example of what love, foresight and self sacrifice can achieve for the true and lasting good of the pupils. His simplicity coupled with whole hearted devotion to lofty ideals is always an example to his associates and pupils. If at all my friends and I at Vaidyeshwara are going to do a real service to him it would be nothing but putting into practice what he had been exhorting us to do all these years.

---

He watch'd and wept, he pray'd and felt for all.

— *Goldsmith*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமைக்கோர் திலகம்

பொன்போற் கதிர்பரப்பிப் பூவுலகோர் தானெழவே
அன்புக் கதிற்கரத்தால் அரவணைத்தான் ஆதவனும்

அம்மையே அப்பாஎன் அத்தனே என்றுசொலி
இம்மா நிலந்தனிலே எழுந்திருந்து மணியென்ன?

என்றதுமே எட்டென்றார் எட்டி யடிவைத்தேன்
என்றுமிலா வேகமுடன் எப்படியோ உண்டுடுத்து

பள்ளிமணி கேட்டதுமே பயந்தோடும் பாலகன்போல்
துள்ளி நடந்தோடித் துடித்துப் படியேறத்

தம்பீநில் என்ற தண்ணுரை தான்கேட்டு
நம்பிக்கை தானிழந்து நாணித் தலைகுனிந்து

நின்றேன் நானின்றேன் நெடுமரம்போல் நின்றேன்
என்றும் குலையாத இருமடிப்புச் சால்வையினை

நன்றே இடத்தோள்மேல் நலங்காது தான்போட்டு
முன்னேதான் நிற்கும் முகத்தையுமே பார்த்துவிட்டு

அவசரம்தான் என்றாலும் ஆறுதல்தான் என்றாலும்
கவனமுடனே நடக்கும் கனத்தநடைதனில் வந்து

இன்போ டணைத்துமே என்னதம்பி நேரமென்று
தன்கையாற் காட்டினார் தவறாக் கடிகாரம்

பார்த்தாயா? என்று பண்புடனே கேட்டிட்டார்
வேர்த்து விறுவிறுத்து வேறொன்றும் பேசாது

வீரம் களத்துவிட்டு வெறுங்கையோ டிலங்கைபுக்க
சூரன் நிலையானேன் சொல்லவோ கம்பனில்லை

காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடிவர
நாட்டுக்குள்ளே போக்கி நற்பயிர்கள் செய்வதுபோல்

ஏட்டிற் கிடையாத இனியபல புத்திசொல்லி
கேட்டின்புற நல்ல கேலிக்கதை சொல்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியெண்ணித் திட்டமிட்டு எழுதிக் குவித்திடுவார்
கண்ணியமாய்த் தன்கடமை கணப்போதும் தான்தவருர்.

ஆங்கிலமும் அணிதமிழும் அழகாய் எழுதிடுவார்.
ஆங்கிலத்தைக் கற்பவற்கு அழகாய் முறைசொல்வார்

ஆங்கிலத்தை மாணவர்க்கு அன்பாய் புகட்டுகையில்
ஏங்கிடுமே என்மனமும் இனியமுறை கண்டு

முப்பத்தைந் தாண்டு முழுமூச்சுடன் உழைத்து
ஒப்பில் மகிழ்ச்சியுடனே ஓய்வு பெறுகின்றுர்.

இப்புவியில் எங்கணுமே இந்தமனிதரைப் போல்
ஒப்புரவு ஆற்றல் ஒழுக்க முடையவரை

இப்பிறவியிற் காண இயலாது என்றிடுவார்.
அப்படியோர் அன்பர்கீழ் ஆண்டு பலவாக

அன்போ டியைந்துபணி ஆற்றிப் பெருமையுற்ருேம்
என்றும் மறவோம் மறவோம் இதுஉண்மை

நல்லூருக் கந்தன்தன் நல்ல திருவருளால்
எல்லாப் பொருளும் இனிதாகப் பெற்றிடவே

தொல்லைமறை வேதம் துதிக்கும் திருவருளை
பல்லுயிரும் போற்றப் பணிவோம் பணிவோமே.

திருப்பூங்குடி **வி. க. ஆறுமுகம்.**

---

"முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
மினசொ லினதே யறம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Vice - Principal as I saw him

**Mrs. V. Vamadeva B. A.**

It was Rajaji who once said, "when a man has been in the world for a long time and achieved certain eminence, people tell all sorts of stories about him and most of them are not true". But — one cannot say that of our Vice - Principal, whose career marks the beginning and end of an era in the history of Vaidyeshwara Vidyalaya. For nearly forty years he had guided, impelled and adorned the activities of Vaidyeshwara It is not an exaggeration to say that most of us had seen in him the ideal servant of an institution set up by the Ramakrishna Mission.

It was my privelege to have had some acquaintance with him, at least for a couple of years. At the first encounter itself I was able to visualise to some extent the abilities of this quiet man at the top.

He was a born adminstrator. He was firm and never faltered. When he made up his mind on an issue however bitter it may be to others, he carried it out quietly and efficiently. Yet, he was never a tough administrator. His ability to lead was the key to his success. He never took pride in leadership. He did his duty conscientiously and never wasted a single selfish thought on what view the public would take of his action. He never "sought tne palm without the dust". He always worked hard and it was always easy for us to serve under the hard working administrator.

Like the Franciscan Friars, his motto was "Laborare est orare". His entire career has been that of a "man of religion". Everything he did was done in the spirit of a true devotee of the Lord.

Anything said about him is incomplete if one fails to mention his contributions to the teaching of English as a second language. Every English teacher at Vaidyeshwara had received some sort of a training in the herculean task of teaching English these days. Many an outsider has often referred to some of our English teachers as "Kuddi Vyramuthus" — (small Vairamuthus).

Absolute perfection in whatever task he undertook was another characteristic typical of "C V.". If the Annual Inter House Sports Meet has been organized perfectly, if the Terminal Examinations have been conducted with "vigilant and effective supervision in every part of the hall"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and with utmost care, if thc school time table has been cast without any clash or misfit; then one can be sure that it was the Vice Principal who was ultimately responsible.

A word or two about his manner of speech. He spoke in a hushed voice but on very high themes.

When one speaks of Vaidyeshwara, one thinks of Vyramuthu, - the hub of all activities in the school. In fact Vaidyeshwara and Vyramthu are synonymous. But what has been said of him is incomplete without any reference to the Principal for, we saw in them a "Duality in Oneness". In brief, both were complementary and supplementary personalities, The Vice - Principal's premature retirement is indeed sad news. Vaidyeshwra has lost its most eminent man — a born administrator, a great leader and the very spirit of Vaidyeshwara, But Lost? No we do hope that he will continue to guide us in the future too. I would now join my friends in wishing him good Health and Prosperity for many many more years to come.

"Knowledge should not be a philosopher's impulse —
knowledge for the sake of knowledge.
Knowledge should be a physiologist's impulse —
knowledge for the healing that it would bring to mankind."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உப அதிபர்

**திருமதி T. இராமநாதன்** Dip - in - Tamil

வைத்தீஸ்வர வித்தியாலயம் என்று சொல்லும் பொழுதே அதில் அம்பிகைபாகன் வைரமுத்து என்ற சொற்களும் சேர்ந்து ஒலிக்கின்றன. அப்படிக் கல்லூரியோடு பிரிக்க முடியாதபடி பின்னிக் கிடந்தவர்களுள் ஒருவரான எம் உப அதிபர் அப்பிணைப்பறுக்கும் காலம் அண்மிவிட்டது. அவர் ஓய்வு பெறப் போகிறுர். அவரைப் பற்றி அவரது தன்னல மற்ற சேவைகளைப் பற்றி, ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் அவருக்குள்ள ஈடுபாட்டைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனுல் 1962-ம் ஆண்டு தொடக்கமாகவே எனக்கு அவரோடு பழகும் வாய்ப்புக் கிட்டியது. அக்குறுகிய காலத்தில் நான் அவரைப் பற்றி அறிந்தவற்றுள் சில வற்றை இங்கு கூற விரும்புகிறேன்.

எம் உப அதிபர் எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் பதற்றமோ பரபரப்போ இன்றி அமைதியாக அலை அடங்கிய சமுத்திரம்போல் இருப்பர். 'அவசரம்' பதற்றம் போன்ற சொற்களுக்கு அவரைப் பொறுத்தவரையில் பொருளில்லைப் போலும்—உலாவும் நேரங்களிலும் சரி, உத்தியோகத்திற்குப் போகும் நேரங்களிலும் சரி, தான் வழக்கம் போல் வைத்து நடக்கும் அடிகளை ஒரு சிறிதேனும் கூட்டியோ குறைத்தோ வைத்து நடக்கும் வழக்கம் அவரிடத்தில்லை. நடையில் அத்தனை நிதானம்! இனிக் கல்லூரியில் — வகுப்பு அறைகளில் — மாணவர்களைக் கண்டிக்கும் பொழுதும் அவர்களின் முதுகை அன்புடன் வருடிக் கதைத்துக் கல்வி யூட்டும் நேரத்திலும், ஆசிரியர்களுடன் அளவ்ளாவும் போதும் இதே நிதானத்தைக் காணலாம். ஏன் அவரது குடும்ப வாழ்க்கையில்கூட இந்த நிதானம் இடம்பெற்று விட்டதென லாம்—இனி,

எத்தகைய கடினமான வேலைகளையும் எம் உப-அதிபர் மிக இலகுவாக மன மகிழ்ச்சியுடனும் முக மலர்ச்சியுடனும் மறுக்காது மற்றவர் செய்யும் வண்ணம் வேலை வாங்குகிற ஆற்றலை இறைவன் அவருக்குப் பிரத்தியேகமாக அளித்திருக்கிறுன். எத்தகைய விஷயமாயினும் தான் பொறுப் பேற்றுல் 'இலை மறை காயாக நின்று' பசி நோக்காது, கண் துஞ்சாது கருமமே கண்ணுயிருந்து வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர். அவர் பெயருக்கும் புகழுக்கும் நாணுபவராகையால் எப்பொழுதும் திரைமறைவு வாழ்க்கையையே விரும்பி நிற்பர்.

அது மட்டுமன்று தன்னேடு சேர்ந்து உழைப்பவர்களை யெல்லாம் தமது நெருங்கிய உறவினராக மதிக்கும் மாண்புடையவர். ஒரு சக ஆசிரியரோ அவர் குடும்பத்தாரோ நோய் வாய்ப் பட்டார் என இவர் அறிந்தாற் போதும், அந்த ஆசிரியரைக் காணும் நேரமெல்லாம் நோயாளியைப் பற்றி அன்போடும் அக்கறையோடும் விசாரிப்பார், ஆறுதல் கூறுவார், வேண்டுமாஞல் தம் அநுபவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் கண்டுள்ள ஆலோசனைகளையும் கூறுவார். இத்தகைய ஒரு அன்புள்ளத்தை அடுத்த ஆண்டு எம் ஆசிரிய மத்தியில் நாம் காணமுடியாதே!

உப அதிபர் கல்லூரிக்காற்றிய தொண்டுகளைப் பற்றி நான் கூற முற்படுவது வீண் முயற்சியேயாம் — எனினும் சிலவற்றையாவது எடுத்துரைத்தல் அவசியம் என நினைக்கிறேன். யாராவது உப-அதிபரை சந்திக்க விரும்பினுல் அவரை வீட்டில் சந்திப்பது அரிது. ஆனுல் வைத்தீஸ்வரக் கல்லூரி அலுவலகத்தில் கல்லூரி 'பைல்களின்' மத்தியிலே அவரை இரவு 10 மணி நேரத்திலும் சந்திக்கலாம்.

அடுத்தபடியாக, அவர் தன்னலங் கருதாது, நேரத்தையும் நோக்காது ஆங்கிலம் பயிற்றும் அழகு நாம் நாள்தோறும் கல்லூரி விட்டபின் கண்டு வரும் காட்சியாகும். 'தன் மெய்வருந்த முயற்சி கூலிதரும்,' என்று எண்ணி மாணவர் நன்மை ஒன்றையே கருதி, ஆங்கிலம் பயிற்றி வந்தார். வைத்தீஸ்வரக் கல்லூரியில் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்கு உப அதிபர் இளைப்பாறுவது ஒரு பெரு நட்டமாகும் எனலாம்.

